விலை சதம் 60

பக்கங்கள் — 10

SRI LANKA - JAFFNA ... RECEIVED 1980-6-16 PERIODICALS DIVISION ... LIBRARY

பாவியுங்கள்!

நாள் எல்லாம்

நறுமணம் கமழும்

அண்ணா பத்தி
ஜெயந்தி பத்தி
கஜானா பத்தி

# ஈழநாடு
## வார மலர்

*THE EELANADU VARAMALAR*

யோகக்கலை
மில்க்வைற் நீல சோப்
மேலுறைகள் 50 அனுப்பி
யோகாசனப் பயிற்சி விளக்
கப் படங்களையும் 'யோகக்
கலை' என்ற நூலையும்
பெற்று- யோகாசனப் பயிற்
சியை இலகுவில் கற்றுக்
கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 22 | ஆனி 26 | ஷஃபான் 24 | ஞாயிற்றுக்கிழமை | (15—6—80) | இதழ் 126

# யாழ். மத்திய கல்லூரி பகிஷ்கரிப்பு முடிவு!

## நாளை வகுப்புகளுக்கு செல்ல மாணவர் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் நடந்த மாணவர் பகிஷ்கரிப்பு, உண்ணாவிரதம், மறியல் கதவடைப்பு ஆகியன முடிவடைந்து நாளை மீண்டும் வழமை போல் கல்லூரி திறக்கப்பட்டு வகுப்புக்கள் நடைபெறவிருக்கின்றன. மாணவர்கள் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு வகுப்புகளுக்குத் திரும்புவதற்குச் சம்மதித்துள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரி விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து பிரச்னைக்கு சுமுகமான தீர்வு காணவும், நிலைமை சீராவதற்கும் கல்விமான்கள், பெற்றோர், பழைய மாணவர் பலரும் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் பெரும் முயற்சி எடுத்தனர்.

### உயர் அதிகாரி நாளை வருகிறார்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பிரச்னைகள் தொடர்பான விசாரணையை நடத்துவதற்கு கொழும்பிலிருந்து கல்வி அதிகாரி ஒருவர் நாளை இங்கு வரவிருக்கின்றார் என கல்வித் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

மாணவர்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டு பாடசாலை திரும்பிய பின்னரே குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணை நடைபெறும் என்க் கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது.

### மாணவர் தீர்மானம்

கடந்த மூன்று வாரங்களாக பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள், பகிஷ்கரிப்பைக் கைவிட்டு நாளை திங்கட்கிழமை காலை கல்லூரிக்குச் செல்வார்கள்.

நேற்று நண்பகல் கூடிய யாழ். மத்திய கல்லூரி மாணவர் தலைவர்கள் கூட்டத்தில் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு, நாளை திங்கட்கிழமை கல்லூரிக்கு செல்வதென தீர்மானிக்கப்பட்டது.

நேற்றுக் காலை மாணவர் தலைவர்களும், வடமாநில வித்தியாதிபதி திரு. மா. மாணிக்கவாசகரும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இச் சந்திப்பின் போது யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் கலந்து கொண்டார்.

மாணவர்களின் கோரிக்கைகள் உடன் கவனிக்கப்படுமென்றும், கல்லூரியின் கல்வி, விளையாட்டு ஆகியவை முன்னேற்றம் செய்யப்படுமெனவும் வித்தியாதிபதி உறுதியளித்தார். அதிபர் மீது மாணவர்கள் சுமத்திய 85 குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை

(10-ம் பக்கம் பார்க்க)

### திரிபுராவில் வன்முறை 1000 பேர் பலி!

(புதுடில்லி)

புதுடில்லியில் கடந்த ஒரு வாரகாலமாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது 1000 பேர் கொல்லப்பட்டனரென உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

### கல்லூரியை நாளை திறக்கத் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாளை திங்கட்கிழமை திறக்கப்படவேண்டும் என்று நேற்று பிற்பகல் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடந்த பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

வடமாநில வித்தியாதிபதி திரு. மா. மாணிக்கவாசகர் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் வட பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. பி. மகேந்திரன், யாழ் மாவட்ட பொலிஸ் அதிபர் திரு ஹெக்லின் விக்கிரமசூரியா, யாழ். பெற்றோர் சங்கச் செயலாளர் திரு எஸ். பொன்னையா, பெற்றோர் குழுப் பிரதிநிதிகள், பெற்றோர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வடமாநில வித்தியாதிபதி திரு. மா. மாணிக்கவாசகருக்கும் யாழ் மத்திய கல்லூரி மாணவ தலைவர்களுக்குமிடையில் ஏற்பட்ட சமரச முடிவை ஏகமனதாக ஏற்றுக்கொள்வதென்று இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மாணவர்கள் பகிஷ்கரிப்பை கைவிட்டு திங்கட்கிழமை கல்லூரிக்குச் செல்லவேண்டுமென்றும், மாணவர்கள், எவ்விதத்திலும் பழிவாங்கப்படமாட்டார்களென்றும் குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணை நடத்தப்படுமென்றும் பெற்றோர் குழு அதிபரை சந்தித்துக்

(10-ம் பக்கம் பார்க்க)

### வவனியாப் பகுதி கிராமங்களில் கமக்காரர்களுக்கு தொல்லை கொடுத்த திருட்டுக் கூட்டம் பிடிபட்டது!

#### ரூ. 27,065 பெறுமதியான பொருட்களும் மீட்பு

(வவுனியா)

ரூபா 27,065 பெறுமதியான அக்கத்தின் குழாய்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரம், ஆடுகள், மாடுகள் முதலிய வற்றைக் கொள்ளையடித்தது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஆறுநபர்களை வவுனியா பொலிசார் மடக்கிப் பிடித்ததுடன் பொருட்களையும் மீட்டுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த சரப்பெரிய குளம், தவசமவாசிகளான விஜேசூரிய, ஜயசூரிய, நிமால் ரத்நாயக்க, கோறளை தெர விரசிங்க, விஜேகன் திபால, திலகசிறி ஜயசூரிய ஆகிய ஆறு சந்தேக நபர்களும் அநுராதபுரம் வெலிவிலிருந்து குறிவெந்தபிலவுக்கு திருடப்பட்ட கால் நடைகளைக் கொண்டு செல்கையில் பொலிசாரிடம் சிக்கினர்.

நம்பகமாகக் கிடைத்த தகவலின் பேரில் சப் இன்ஸ்பெக்டர் ஜயவிக்கிரம தலைமையில் பொலிஸ் கோஷ்டி ஒன்று ஸ்தலத்திற்கு விரைந்தது. பொலிசாரைக் கண்ட திருடர்கள் கால் நடைகளைக் கைவிட்டு, யானைகள் வசிக்கும் அடர்ந்த காட்டினுள் ஒடி ஒளிய முயன்றனர். விரட்டிச் சென்ற பொலிசார் அவர்களை வளைத்துப் பிடித்து விசாரணை செய்ததில் ரூபா 27,065 பெறுமதியான, 12 பசுக்கள், 6 ஆடுகள், 2 வண்டில் மாடுகள் ஒரு தண்ணீர் இறைக்கும் யந்திரம், 955 அடி நீளமுள்ள அக்கத்தின் குழாய்கள் ஆகியன பிடிபட்டன. இப்பொருட்கள்

(10-ம் பக்கம் பார்க்க)

வெளிநாடுகளிலும்
கப்பல்களிலும் தொழில்கள்
NATIONAL INSTITUTES
தொழில் நுட்பப் பயிற்சிகளுக்கு 2-ம் பக்கம்
விளம்பர இல. 5981 பார்க்கவும்.

இலங்கையில் ஆகக்கூடிய வட்டி விகிதத்தை
வழங்கும் ஒரே நிறுவனம் "மகாராஜா"
யாழ்நகர் மக்களுக்கு அரிய சந்தர்ப்பம்
இவற்றை வழங்குவதோடு

'போட்டோ ஸ்ரட்'
சிறந்த
பிரதிகளையும் வழங்குகிறது
பிரதி ஒன்று =/75 சதம் மட்டுமே

மகாராஜா முதலீட்டு
(வரையறுக்கப்பட்ட)
நிதிநிறுவனம்

21% வருடமொன்றுக்கு மாதாந்த வட்டி
23% இரண்டுவருடங்களுக்குமாதாந்த வட்டி
25% இரண்டுவருடங்களுக்குகாலமுதிர்வுவட்டி
குறைந்த பட்ச வைப்பு: ரூபா 500/-
விபரங்கட்கு:

மகாராஜா முதலீட்டு
(வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்
122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 8267

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனம்பொருள் அபிவிருத்திச் சபை

பனம் பொருட்கைப்பணியாளர், பனம் பொருள் வியாபாரிகள் மற்றும் தரமான பனம் பொருட்களின் விற்பனையாளர்களாகத் தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பனம் பொருள் உற்பத்திகளை, பனம்பொருள் அபிவிருத்திச் சபைக்கு ஒழுங்காக வழங்குதல்வேண்டும். பனம்பொருள் அபிவிருத்திச்சபை அவற்றைக் கொள்வனவு செய்து நியாயமான விலை வழங்கும். அத்துடன் சபை கொள்வனவின் பொருட்டு முன் பணமும் செலுத்தும் விண்ணப்பதாரிகள் தம்முடைய சகல விபரங்களையும் முழுமையாக "தலைவர், பனம்பொருள் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு 30 ஜூன் 1980க்கு முன்பாக அறியத்தர வேண்டும்

என். கனகசூரியர்
தலைவர்
பனம்பொருள் அபிவிருத்திச் சபை
6030

## அறிவித்தல்
## பனம்பொருள் அபிவிருத்திச் சபை

தனது நோக்கங்களுக்காகவும், குறிக்கோள்களுக்காகவும் பயன்படுத்த பனம்பொருள் அபிவிருத்திச் சபைக்கு ஒரு அடையாளச் சின்னம் (Crest) தேவைப்படுகிறது. எனவே, பொருத்தமான அடையாளச் சின்னத்தை வரைந்து வழங்கும் போட்டிக்கு, ஓவியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிகச் சிறந்த சின்னத்தை வரைந்து வழங்குபவருக்கு ரூபா 1,000 - சன்மானமாக வழங்கப்படும். வரையப்பட்ட சின்னங்களில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுக்கவோ அன்றித் தவிர்க்கவோ இவ்வுரிமை சபைக்கு உரித்துண்டு. சகல விண்ணப்பங்களும் வரையப்பட்ட அடையாளச் சின்னங்களுடன் இணைக்கப்பட்டு, "தலைவர், பனம் பொருள் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 30 ஜூன் 1980 அன்றோ அதற்கு முன்னாகவோ கிடைக்கும்படி அனுப்பப்படவேண்டும்.

என். கனகசூரியர்
தலைவர்
பனம்பொருள் அபிவிருத்திச்சபை.
6029

## பனம் பொருள் அபிவிருத்திச் சபை

தரமான பனம் பொருட்களை பனம்பொருள் அபிவிருத்திச் சபை நல்ல விலை கொடுத்து வாங்கி பிற இடங்களுக்கு சந்தைப்படுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளது இதன் பொருட்டு பனம் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களைக் கலந்தாலோசிக்கும் முகமாக எதிர்வரும் திங்கட்கிழமை (23-6-1980) யாழ்ப்பாணம் பனம் பொருள் அபிவிருத்திச் சபைக் காரியாலயத்தில் காலை 10 மணிக்கு ஒரு கூட்டம் நடைபெறும் பனம் பொருள் அபிவிருத்தியில் ஈடுபாடுள்ள யாவரையும் இக்கூட்டத்திற்கு சமுகம்தருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

என். கனகசூரியர்
தலைவர்
பனம் பொருள் அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்பு செயலகம்,
கண்டி வீதி. யாழ்ப்பாணம். 6031

சீர் அமைக்கப்பட்ட
## ஹொண்டா
மோட்டார் சைக்கிள்கள்
CD 70, 1976 மொடல், டெலிகா
வேன் 1976 மொடல்களுக்கு
இன்றே முற்பணம் செலுத்திப்
பதிவுசெய்து கொள்ளுங்கள்.
மேலும் ஜப்பானிலிருந்து
எம்மால் இறக்குமதிசெய்யப்பட்ட C 50, C 70, C 90
ஹொண்டா மோட்டார்
சைக்கிள்களுக்குரிய டயர், ரியூப்புகளை
சகாய விலையில் வாங்கிப் பயன்படுத்த நாடுங்கள்
## கலாம் ஹாட்வெயர்ஸ்
104, ஸ்டான்லி வீதி -- யாழ்ப்பாணம்
தந்தி: கலாம் தொலைபேசி: 325
6034

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

125 CC ஹொண்டா மோட்டார் சைக்கிள் விலை ரூபா 8000/-. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி நா. தருமலிங்கம் ஆசிரியர், சந்தையா உபாத்தியாயர் வீதி சுந்தரோடை, சுன்னாகம். 6041

சொந்தப் பாவிப்பில் உள்ள ஆங்கில தட்டச்சு யந்திரம் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: ஸ்ரீ சண்முகநாத அச்சு யந்திரசாலை 348, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் 6032

புதிய நிலையில் உள்ள மின்சாரத்தில் இயங்கும் - Necchi Lycia 524 Automatic and 522 zig - zag with 90 Designs விற்பனைக்குண்டு 5, அம்மன் வீதி (off Palaly Road) கந்தர்மடம், யாழ்ப்பாணம். 6028

சீசச் சட்டியினுல் செய்த சோடா காய்ச்சும் சட்டி விற்பனைக்குண்டு ரூ. 4900/ சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி, யாழ்ப்பாணம். 6035

உங்கள் நூலகத்தில் அவசியம் இருக்கவேண்டிய தரமான இலக்கிய மாத சஞ்சிகை அமுதசுரபி தை 1980 இதழில் இருந்து ஒழுங்காக இறக்குமதி செய்கின்றோம். விலை 2/75, தபாலில் 3/- டேவிட் லிபோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். 6020

எம்மிடம் எழுவது புதிய படங்களின் பாடல் புத்தகங்கள் உண்டு வாரம் ஒன்றிற்கு நான்கு புதிய புத்தகங்களும் வெளியிடுகின்றோம். டேவிட் லிபோரி, யாழ்ப்பாணம். 6025

யாழ்ப்பாணம் வைரவ கோவிலுக்கருகாமையில் 2 பரப்பு 60 குழியுடன் எல்லா வசதியும் கொண்ட வீடும் வளவும் அல்லது வெறும் காணி 1 பரப்பும் 60 குழியுடன் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இ. ச. நடராசா, 90/6, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் 6016

90 கலன் கொள்ளக்கூடிய கண்ணாடி இழையினால் செய்யப்பட்ட தூப்பிடிக்காத சேருவதற்கு பாவிக்கக் கூடிய இரண்டு டீசல் ராங்குகள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: பிளாஸ்டிக் சேவிசெஸ் பருத்தித்துறை வீதி, மயிலிட்டி 6014

கொருடாவில், அம்மன் வீதியில் வீடும் வளவும், நல்ல தண்ணீர் கிணற்றுடனும், சுற்றிவர மதிலுடனும், விற்பனைக்குண்டு காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் பார்வையிடலாம். தொடர்பு கொள்ளவும்: திருமதி இ. இராமச்சந்திரன், அம்மன் வீதி, கொருடாவில், தொண்டைமானாறு. 5986

இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Morris Oxford டீசல் கார் விற்பனைக்கு அல்லது வேறு காருக்கு மாற்ற தற்கு உண்டு இல: 16, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 6021

### விற்பனைக்கு

பனைமரச் சிலாகைகள் விற்பனைக்குண்டு தேவையானோர் தொடர்பு கொள்ளவும் மலர் ஒயில் இன்டஸ்ரீஸ் லிமிட்டட், காங்கேசன்துறை வீதி, இணுவில். போன் 1839, சுன்னாகம். 6027

தனிப் பாவிப்பில் இருந்த வொக்சோல் வைவேர்ண் (Vauxhall Wyvern) E L 1900 கார் விற்பனைக்குண்டு. 97, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 6044

### தேவை

கரம்பன் கிழக்கில் இருக்கும் பாக்கியம் வைத்தியசாலையில் ஆயுள்வேத வைத்தியருக்கு உதவியாளராகக் கடமையாற்ற ஆண்பாலார் தேவை. ஓய்வு பெற்ற குடும்பப் பாரமற்ற மருத்துக் கலவையாளர் விரும்பத்தக்கது நற்சாட்சிப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: பாக்கியம் வைத்தியசாலை, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை. 6008

லேத் எஞ்சின் நடுவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. நல்ல வேதனம் அளிக்கப்படும். செல். மீற்றல் இண்டஸ்ரீஸ் மூல்லைத்தீவு 6018

தையல் வேலைத் தொழில் தெரிந்தவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் சேரலாம் பழக விரும்புபவர்களும் வரலாம். 18-6-80 ந்திகதி வரவும். D.டேவிட், 143, பாலதால வீதி, யாழ்ப்பாணம். 6019

நல்ல ஆங்கில அறிவுள்ள ஆங்கில தட்டச்சு / சுருக்கெழுத்தாளர் தேவை. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். திரு லக்கா இஞ்சினியரிங் இண்டஸ்றீஸ், 50, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 6045

### பயிற்சி

வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயரிங் (IEE முறைப்படி) Transistor றேடியோ, P M G Certificate, Building Construction, Draughtsmanship Pipe & Bar Bending முதலிய பல தொழிற் பயிற்சிகளை நவீன வெளிநாட்டு முறையில் அளிப்பவர்கள் நவீன இன்ஸ்ரிரியூட் 57, 59, பாஷையூர் வீதி, யாழ்ப்பாணம். 5981

### கல்வி

1980-ம், 1981-ம் ஆண்டுகளுக்கான தொழிற் பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன. குளிரூட்டல் நெறி, றேடியோ, டெலிவிசன் நெறி, மோட்டார் வயரிங், மோட்டார் இயந்திரவியல், மின் இணைப்பாளர் நெறி அத்துடன் தரித ஆங்கில பேச்சும், இலக்கணமும் வெளிநாட்டிற்கு உகந்த முறையில் செய்முறைப் பயிற்சிகளுடன் நெறிகள் 19-6-80-ல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு அதிபர், I A R. 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6017

### சோதிடம்

கல்வி, திருமணம், உத்தியோகம், தொழில், வெளிநாடு செல்லுதல் முதலிய பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படும். குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக KL. M. Krishnapillaiy ஸ்ரீ ஆதிபராசக்தி சோதிடநிலையம், காங்கேசன்துறை பண்டத்தரிப்பு, சங்கானை. 6037

மாணவர் திங்கள் இதழிற்கு ஆக்கங்களை உடன் அனுப்பவும் கல்லூரிகள் தோறும் மாணவ நிருபர்கள் தேவை.
"மாணவர் குரல்"
121/4 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
6011

அளவெட்டி - மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்
### கேள்விப் பத்திரம்

எம்மிடம் பின்வரும் பாவிக்கப்பட்ட பழைய வெற்றுப் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனையாக இருக்கின்றன.

1. வெற்று நம்புகள் - சுமார் 30
2. ரயர்கள் - சுமார் 10
3. லொறி ரேடியேற்றர் - 1

இவற்றிற்கான கேள்வி விண்ணப்பங்களை சங்கத்தில் ரூபா 1/- கொடுத்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும். கேள்வி விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 20-6-80 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாகச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். கேள்விப் பத்திர கடித உறையின் மேல் இடது மூலையில் "பழைய பொருட்களுக்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிட வேண்டும். பொருட்களை சகல வேலை நேரத்திலும் சங்கத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
6026

மானிப்பாய் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்
### நெற்காணி
### ஏல விற்பனை

சங்கத்திற்கு சொந்தமான நவாலியிலுள்ள பின்வரும் விபரிக்கப்படும் இரு நெற்காணிகள் 1980-ம் ஆண்டு ஆனி மாதம் இருபத்தைந்தாம் திகதி புதன்கிழமை (25-6-80) முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

(1) வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று, நவாலி இறை "காவிரவிற்பிட்டி" நெற்பரப்பு 14, 7/8, எல்லை கிழக்கு தம்பையா பெண் செல்லம்மாவின் ஆதனம், மேற்கும், வடக்கும் ஆற்றுத் தண்ணீர் வாய்க்கால், தெற்கு தம்பிஐயா பெண் தங்கம்மாவின் ஆதனம் இதடங்கலும். பதிவு இல. 301/184.

(2) வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவிற்பற்று, நவாலி இறை, 'வெட்டுவல்கண்டி' நெற்பரப்பு 43 1/4, கிழக்கு கதிரவேலு குழந்தைவேலுவின் ஆதனம், வடக்கு குளம், மேற்கு ஆற்றுத் தண்ணீர் வாய்க்கால், தெற்கு ஒழுங்கை பதிவு E 292/350.

தலைவர்
மானிப்பாய் பரிஷ்
ப. நோ. கூ. சங்கம்.
5-6-80. 5987

### விளம்பரம்

வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 2500 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனையாகவுள்ளது. இவற்றுக்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 5/- செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 20-6-80 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். கேள்விப் பத்திர கடிதஉறையின் இடது மேல் மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும் கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா 500/- ஆகும்

பொதுமுகாமையாளர்
அளவெட்டி-மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம் (வரை)
அளவெட்டி 6030

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இப்படியும் —ஒருவன்!

மஞ்சள் பூசிக் குளித்த மங்கல மங்கையைப் போல நீல வானக் கடலுள் இருந்து மெல்ல எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது முழு நிலவு மதியம்! தன்னந்தனியாக ஒரு குயில் எங்கோ தொலைவிலிருந்து தன் துணையைக் கூவி அழைக்கும் குரல் விட்டு விட்டு சோகமாக ஒலித்து முடிவில் ஓய்ந்து மறைந்தது. எங்கும் அமைதி குடி கொண்டிருந்த அந்த வீட்டின் பின்புறத்தே இருந்த ஊஞ்சல் பலகையில் காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள் கௌசல்யா! அவளது விழி மணிகள் சிந்திய கண்ணீர் நிலவொளிபட்டுப் பளபளத்துக் கொண்டிருந்தது. அவளது தலைவிதியை நிர்ணயித்த ஆண்டவனை மானசீகமாகத் திட்டிக் கொண்டிருந்தாள் அவள். உள்ளத்திலிருந்து புறப்படும் ஆவி என நீண்ட பெருமூச்சுக்கள், பதிலளிக்க யாருமே அற்ற வேதனையில் உள்ளடங்கிக் கொண்டன. வீட்டினுள்ளே தங்கைகள் அடங்கி அனைவரும் படிக்கும் ஒலி கேட்டது...

ம்...... வேறு என்ன தான் செய்வது? கௌசல்யாவின் நினைவுப் புரவி கடந்த கால அனுபவத் தடங்களை ஆற அமர அசைபோட ஆரம்பித்தது. ஓ... அந்த மார்கழி மாதக் குளிர் மாலை வேளையில் இடி மின்னலுடன் கூடிய பலத்த மழை கொட்டிக்கொண்டிருந்த இருளிலே... மூலைக்கொருவராக அனைவரும் உட்கார்ந்திருந்தார்கள். அந்த வீடே ஓவென்று வெறிச்சோடிக்கிடந்தது. உம்... அன்று காலை தான் அம்மம்மாவை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றிருந்தார்கள். ஒரு சில மாதங்களாகப் பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்த அம்மம்மா அன்று திடீரென நெஞ்சு வலிப்பதாகக் கூறவே நான்கு பேராகச் சேர்ந்து தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு போய்விட்டார்கள்...

உம்... ஆண்டவன் ஏன் இப்படிப் பாரபட்சமாக நடந்து கொள்கிறானோ... கௌசல்யா ஒரு வெறித்துவிட்ட சூனியத்தையே தன் மனத் திரையில் கண்டாள். ஓ...! அம்மம்மா! நான்கு பேரின் தோளில் அம்மம்மாவின் உயிரற்ற உடல் வீட்டினுள்ளே வந்தபோது கௌசல்யா வெறிபிடித்தவளாக ஓடிச்சென்று அந்த உயிரற்ற உடலை அணைத்துக்கொண்டு கதறினாளே... ஆமாம்... யாரிந்த அம்மம்மா?

நான்கு பெண் குழந்தைகளுக்கும் ஒரு ஆண் குழந்தைக்கும் வழிகாட்டியாக மூத்தவளாக வந்து பிறந்தவள் கௌசல்யா! கடைசியாக ஒரேயொரு தம்பி பிறந்தவுடனேயே தாய் போய்விட்டாள்; ஐந்து பெண் குழந்தைகளுக்கும் ஒரேயொரு ஆண் குஞ்சு பிறந்து விட்டானே என்று பெருமைப்பட்டபடியே தாயின் ஆவி பிரிந்த போது கௌசல்யா அழக்கூடத் தோன்றாமல் ஏங்கிப்போய் நின்றுவிட்டாள். அவளைக் கண்டு மெல்ல அருகில் வந்து கௌசல்யாவை அணைத்துக் கொண்டபோது தான் அவள் சுய நினைவு பெற்றாள். அம்மா இல்லையே என்ற குறை தெரியாமல் அந்த ஆறு ஜீவன்களும் அணைத்துக் கொண்ட அந்தத் தெய்வத் தாய் தான் அம்மம்மா! இளமையிலேயே கணவனை இழந்து தனிமரமாகப் பற்றிப் படரக் கொழுகொம்பு இல்லையே என்று தரையோடு கிடந்தவள் கௌசல்யாவின் ஏக்கத்தை, குழந்தை ராஜுவின் கண்ணீருடன் சிரிக்கும் விழிகளை, அந்த வீட்டின் வெறிச் சென்ற சூன்யத்தை அனைத்தையுமே பார்த்தபோது அவளாகவே அந்த ஆறு பிள்ளைகட்கும் தாயானாள்.

காலம் வேகமாகவே ஓடிக் கொண்டிருந்தது. ஓ... ஆண்டவன் எவ்வளவு இரக்கமானவன்...? ம்... மனிதர்களால் தாங்க முடியாத துயரத்தை ஒரு போதுமே அவன் பூமிக்கு அனுப்புவதில்லை. மீண்டும் வீடு கலகலவென்றிருந்தது. பொறுப்புணர்ச்சியற்ற அப்பா மட்டும் வீட்டில் தங்காமல் ஊர்சுற்றிக் கொண்டிருந்தார்.

பஞ்சபாண்டவர்களென ஐந்து பெண்களுமே நிமிர்ந்து நான் முந்தி என திமுதிமுவென்று வளர்ந்து வரிசையாக நின்றார்கள். தன் இருபத்து மூன்று வயதைப் பறைசாற்றிக் கொண்டு கம்பீரமாக நின்றாள் கௌசல்யா. தனக்கு டீனேஜ் முடிந்து விட்டது என்பது போல தலைநிமிர்ந்து நின்றாள் உமா. பருவத்தின் வாயிலிலே காலெடுத்து வைக்கத் தயாராகவும் படபடக்கும் விழிகளுடன் பன்னிரண்டாவது படியில் மெல்ல எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் இரட்டைப் பெண்களான நிலா - கலா இருவரும். இன்னும் குழந்தைத் தன்மை மாறாமல் எட்டு வயதுக்கு மீறிய வளர்ச்சியுடன் செழிப்பாக நின்றாள் ஆனந்தி. அனைவருக்கும் செல்லப் பிள்ளையாக குறுகுறுவென்றிருந்தான் கடைக்குட்டி ராஜு. இந்தக் குழந்தைகள் கைநீட்டி வாங்கிப் பசியாற உண்ணும் அழகிலே தன்னை மறந்து நிற்பாள் அம்மம்மா!

ஓடும் காலத்தின் வேகத்தோடு ஓடி ஒரு சிறு வெற்றியைத் தட்டிக் கொண்டதற்கு அடையாளமாக அரசினர் கம்பனி ஒன்றில் நானூறு ரூபா சம்பளத்தில் ஒரு கௌரவமான வேலையும் அவளுக்குக் கிடைத்து விட்டது. உமா வீட்டிலேயே ரியூசன் சொல்லிக் கொடுத்து இயலுமான வரையில் ஏதோ சம்பாதித்துக் கொண்டிருந்தாள். ஒரு சிலந்தி தனது உமிழ்நீரைக் கொண்டே தன்னைச் சுற்றி அழகான ஒரு வலையைப் பின்னுவது போல கௌசல்யாவும் பாச வலையைப் பின்னித் தன் உடன் பிறப்புக்களைத் தன்னோடு இணைத்துக்கொண்டு விட்டாள்.

அன்று வீட்டுக் கவலை என்பதே தெரியாமல் இருந்தவள் கௌசல்யா. ஆபிஸ் முடிந்தால் கடற்கரை, தோழியருடன் சினிமா, தங்கைகளுடன் கோயில் இப்படியெல்லாம் குதூகலமாகப் பொழுது போக்கினாள். கடற்கரை மணலில் கோலமிட்டு அமர்ந்திருந்தாள் கௌசல்யா. பொங்கும் கடலலைகளின் பேரிரைச்சல் கூட அவளோடு ஏதோ ரகசியம் பேசுவது போலிருந்தது.

ஒரு புதிய ராகம், புதிய உணர்வு, ஏதோ ஒரு புதிய உலகில் பிரவேசித்துவிட்டதை போன்ற ஒரு நினைப்பு எல்லாமே புதியனவாக உருவாகிக்கொண்டிருந்த வசந்த காலம்! பருவகாலக் கற்பனைகள் ஆவல்கள் எல்லாமே நீள் விழிக் கடலினுள் மிதந்து கொண்டிருந்தன. வழமையாக அவள் செல்லும் அதே பஸ்ஸில் பிரயாணம் செய்யும் நிரஞ்சனை அவள் சந்தித்தது சில தினங்கள் தான் ஆகியிருந்தன. வழமையாக அவள் பார்க்கும் போது நிலம் பார்த்தும்,

தான் அம்மம்மா பாயும் படுக்கையுமாகி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாள். ம்... இன்று... ஆறு மாதம், அவளால் எதை நினைக்கமுடியாமல் இருந்ததோ எதையுமே தாங்கமுடியாதென்று எண்ணினாளோ அது... அந்தச் சம்பவம் நடந்தேவிட்டது. மாலை மயங்கிக்கொண்டிருந்த ஆறு மணிப் பொழுதில் வாசலில், இரைச்சல் ஏதுமின்றி அமைதியாக வந்து நின்ற காரிலிருந்து நாலுபேரின் கரங்களில் மீளாத் துயில்கொண்டு கிடந்தாளே... அம்மம்மா!... ம்... அடுத்து என்ன? எத்தனையோ மனிதர்கள் பார்க்க வேண்டிய கடமைகளைத் தாயாக, தந்தையாக, தெய்வமாக, வேலைக்காரியாக, குருவாக நின்று நிறைவேற்றி ஒளி கொடுத்த அந்த விடிவிளக்கு... எண்ணெய் தீர்ந்து அணைந்து போய்விட்டதே! யார் யாரோ வந்தார்கள். ஆறுதல் கூறினார்கள் போய்விட்டார்கள். தனியே ஒரு பெண் படப்போகும் கஷ்டத்தைக் கட்டி நின்று ரசிக்கப் பலர் தயாராக நிற்கிறார்கள். ம்... என்ன வாழ்க்கை இது?

கௌசல்யா மெல்ல சலவைக் கல்லை விட்டு எழுந்து நின்றாள். அவளை நோக்கி நடந்து வரும் உருவை... அவள் எதிர்பார்த்திருந்தாளா...?ம்... நிரஞ்சனா??ஓ...! தாயைக் கண்ட கன்றாக அவளது மனம் ஓவென்று அலறத்தொடங்கியது. [illegible] விம்மல்கள் வெளிவந்தன. "நிரஞ்... எனக்கு...இனி யார் இருக்கிறார்கள்? எல்லாமே போய் விட்டன?"—மேலே தொடரவிடாமல் நிரஞ்சனின் கரம் அவளது துடிக்கும் இதழ்களைப் பொத்திவிட்டன. சட்டென்று அவள் விலகி நின்றுகொண்டாள்.

**மலை பாரதிகணேஷ்**

அவள் பாராதபோது அவளைப் பார்த்தும் விழியிமைகள் படபடக்கப் பெருமூச்செறிந்தவன் நாளடைவில் அவளது புன்னகைக்குப் பதில் கொடுக்கத் தொடங்கும் அளவிற்கு முன்னேறிவிட்டிருந்தான்.

அவனையறியாமலே தனக்குள் சிரித்துக்கொண்டிருந்தவள், "என்ன மிஸ்... உங்களுக்குள்ளேயே சிரிக்கின்றீர்கள்? எனக்கும் சொல்லலாமா?" என்ற சகஜமான அழைப்பைக் கேட்டுத் திரும்பிப்பார்த்தாள். குறும்பு தவழும் விழிகளுடன் மெல்லச் சிரித்தபடி நின்றிருந்தான் நிரஞ்சன். வெட்கிச் சிவந்த முகத்தை நிலம் நோக்கித் திருப்பிக்கொண்டு மெல்லச் சிரித்தாள் கௌசல்யா! மறைந்துகொண்டிருக்கும் மாலைச் சூரியனுக்குத் தனது அலைக்கரங்களால் விடையளித்துக்கொண்டிருந்த ஆழ்கடலின் எதிரே கௌசல்யாவும் நிரஞ்சனும் அமர்ந்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். அடிக்கொருதரம் எழும் அலையோசைச் சிலிர்ப்பிலிருந்து அவர்களிடையே மனமொன்றிய காதலுணர்வு மலர்ந்துவிட்டதைப் புரிந்துகொள்ள முடிந்தது. எதிர்காலக் கனவுகள் எதிரே மலர்க்குவியலாக விரிவது போன்ற ஒரு இன்பத்தில் இருவரும் தம்மை மறந்து அமர்ந்திருந்தனர். நாளிதழ்கள் உதிர மாத மலர் கருகி வீழ்ந்துகொண்டிருந்தது.

காலப்போக்கில் நிரஞ்சனின் உறவு வீடுவரை வியாபித்து வளர ஆரம்பித்தது. [illegible] இந்த நேரம் பார்த்துத்

"கௌசல்யா! நீ [illegible] படிக் கூறுகிறீர்கள்' ஏன் நண்பனையா? நான் [illegible] இருக்கிறேன்.. மறந்து போய் விட்டீர்களா?"

"இல்லை...நிரஞ்! நான் மறக்கவில்லை. ஆனால் என்னிடம் இனி என்ன இருக்கிறது? இன்னும் நான்கு ஜீவன்களும் அல்லவா பாரமாக இருக்கின்றனர்? அவர்கள்..." நிரஞ்சன் குறுக்கிட்டான்.

"இல்லை கௌசல்யா..."

"பொறுங்கள் நிரஞ்! இனி என் செல்வங்களை வளர்த்து... ஆளாக்கி ஒரு நல்வாழ்வை அமைத்துக்கொடுக்க வேண்டியது என் கடமை! அப்பா... பொறுப்பற்றவர். நான் எனக்காக வாழ்ந்த காலம் போய் விட்டது' என் உடன் பிறப்புக்கள்..."

"வேண்டாம் கௌசல்யா... என்னை அப்படிப் பிரித்துக் காட்டாதீர்கள்! என் உடன் பிறப்புக்கள்! நான்... உங்களுக்கு அந்நியனா? உங்களில் ஒருவன்? அதைத் தயவு செய்து ஒப்புக்கொள்ளுங்கள்!"

முடியாது நிரஞ்சன்! உங்களால் என்ன செய்ய முடியும்? ஆக முடிந்தால் என்னைக் கல்யாணம் செய்து கொள்வீர்கள் அதைவிட உங்களால் என்ன செய்ய இயலும்? தயவு செய்து என்னை மறந்து விடுங்கள் நிரஞ்."

"கௌசல்யா! போதும்! இவ்வளவு தானா...... என் மதிப்பு? உன்னைக் கல்யாணம் [illegible] நானும் மேலோட்டமாக இதை விரும்பவில்லை! அதைவிட..."

நிரஞ்சனின விழிகட்கள் பிரகாசித்தன. வார்த்தைகள் உறுதியாக வெளிவந்தன. கௌசல்யா பதட்டத்துடன் தொடர்ந்தாள்.

"நிரஞ்... அப்படியானால் நீங்கள்......"

"கௌசல்யா... என் செல்வங்கள் அந்த ஜீவன்களுக்குக் கடமையை நிறைவேற்றிய பின்பு நீங்களும் காத்திருந்தால் நான் உங்களுக்கும் வழிவிடுவேன். அது தான் என் இலட்சியம்! நானும் உங்களுடன் சேர்ந்து உழைக்கிறேன். என்னை நம்புங்கள்! [illegible]" - தழு தழுக்கும் உள்ளத்தின் [illegible] முழு நிலவு பௌர்ணமியாக [illegible] கொண்டிருந்தது. [illegible] ஜொலிக்கும் தெய்வமென நிரஞ்சனின் உருவம் நிலவில் நடந்து கொண்டிருக்க கௌசல்யா வாய் விட்டுச் சிரித்துக் கொண்டாள்!

[illegible]

## காலம் வரவேண்டும்

சாதி பிரிந்து சமூகமுடைந்துச்
 சமத்துவம் தான் கெட்டு
பாதி பிரிந்து பண்பே கெட்டு
 பாரோர் அடிபட்டு
மோதி பழித்திடு மூடத் தன்மை
 மேதினி யில்நீங்கி
நீதி நிலைத்து நேர்மை வளரும்
 காலம் வரவேண்டும்-

மந்தைகள் போலே ஆண்களை ஆக்கி
 சீதனம் எனக் கேட்டு-
சந்தைப் பொருளாய் சந்தியில் நிறுத்தி
 ஏலம் போட்டிங்கே-
முந்தை மூடர் மூட்டிய முட்டாள்
 முறைகள் முடிவடைந்து
சிந்தை கலங்கும் கன்னியர் சிரிக்கும்
 காலம் வரவேண்டும்.

-த. நாகேஸ்வரன்

## துளிகள்

வரதர்

தமிழ் நாடு சட்டமன்றத் தேர்தலில் பெரு வெற்றி பெற்ற எம். ஜி. ஆருக்கு ஈழத்துத் தமிழ்த் தலைவர்களின் வாழ்த்துக்கள் கிடைத்திருக்கின்றன. இதே இடத்தில் கருணாநிதி இருந்திருந்தால் - பாராட்டுக்கள் 'ஓ'வென்று உயர்ந்திருக்கும் என்பது கச்சேரி நவம். ஒரு இடத்தில் "கருணாநிதியை ஈழத்தில் ஒருவராகவே நினைத்திருக்கின்றோம்" என்று குறிப்பிட்டதை எல்லாரும் கவனித்துத்தான் இருப்பார்கள்.

ஒருவர் செய்த சூதுவாதுகளை மனதில் தூக்கி வைத்துக் கொண்டு எந்தக் காலத்திலும் அவரை எதிரியாகவே கருதி வந்த காலம் போய்விட்டது. இப்போதைய அரசியலில் "நிரந்தர பகைவர்கள் என்றோ, நிரந்தரமான நண்பர்கள் என்றோ யாரும் கிடையாது" என்பதே சரியான சித்தாந்தம்.

இந்திரா காந்தியும், கருணாநிதியும் எப்படி எப்படி இருந்தார்கள்? பிறகு எவ்வளவு நெருங்கி வந்தார்கள்! இனி எப்படி போவார்களோ!

ஏன், எங்கள் அமிரும், சிவாவும், ஆளை ஆள் கீறிக் கிழித்துக் கொண்டிருந்தவர்கள் தானே? இப்போது ஈருடலும் ஒருயிரும் ஆகிவிட்டார்களே!

"கருணாநிதி என்ன நினைப்பாரோ" என்ற கவலையில்லாமல், எம். ஜி. ஆரோடு மிக நெருங்கி உறவாடுவதுதான் கூட்டணி செய்யவேண்டிய விவேகமான காரியம்!

●

எனக்குத் தெரிந்த ஒரு நல்ல குடும்பம். குடும்பத் தலைவர் நல்ல உத்தியோகத்திலிருந்து பென்சனிலிருந்தார். மூன்று பிள்ளைகள். மூன்றும் ஆண் பிள்ளைகள். ஆசைக்கு ஒரு பெண்பிள்ளை இல்லையே என்று அவர்களுக்குக் கவலை. அவர் சம்பாதித்தவை வீடு, வளவு என்றும், சீதனம் என்றும் ஏராளமான சொத்துக்கள். மூன்று பிள்ளைகளையும் மிகவும் செல்லமாகவும் அதே சமயம் நல்ல முறையிலும் அவர்கள் வளர்த்திருந்தார்கள். பரம்பரை குணமோ அல்லது அவர் வளர்த்த விதமோ - மூன்று பிள்ளைகளுமே படிப்பில் புலிகள். [illegible] மூத்த மகன் டாக்டராகி, அமெரிக்காவுக்குப் போய் அங்கேயே தொழில் செய்கின்றார். மற்ற இரண்டு பேருமே என்ஜினியர்கள். ஒருவர் சௌதி அரேபியாவில். மற்றவர் மேற்கு ஜெர்மனியில்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் தகப்பனார் திடீரென்று மார

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை இயற்றுவது எப்படி? [6]

# வெண்பாவிற் புகழேந்தி

ஒரு காலத்தில் வெண்பா எந்தேரிடையே பெருவழக்கில் இருந்தது. ஒருவருக்கு ஒருவர் கடிதம் எழுதுவதாயிருந்தாலும்கூட வெண்பாவிலேயே எழுதுவார்கள். ஓசைநுட்பத்தைத் தெரிந்துகொண்டு கல்வி இல்லாத மக்கள்கூட வெண்பாப் பாடி இருக்கிறார்கள். ஒரு செய்தியை வசனத்திற் சொல்வதை விட வெண்பாவிற் சொல்வது இலகுவான காரியமாகப் பலருக்கு இருந்திருக்கிறது.

புலவர் ம. பார்வதிநாதசிவம்

ஒரே நாதசுரத்தைப் பல வித்துவான்கள் வாசித்தாலும் நாதசுரத்திலிருந்து வரும் நாதம் வித்துவானுக்கு வித்துவான் வேறுபடும் அதே போலத்தான் ஒரேயாப்பைக் கொண்ட வெண்பாவைப் பல புலவர்கள் பாடினாலும் கவி இன்பம் புலவருக்குப் புலவர் வேறுபடும் வெண்பாவை இதுவரை எத்தனையோ புலவர்கள் பாடி இருந்தாலும் புகழேந்திப்புலவருக்குவெண்பா வாய்த்தது போல் வேறு எவருக்கும் வாய்க்கவில்லை என்று துணிந்து கூறலாம். அதனால் தான் வெண்பாவிற் புகழேந்தி என்று அவர் சிறப்பித்துக் கூறப்பட்டார்.

"காதலியை ... காணகத்தே கைவிட்ட பாதகனைப் பார்க்கப் படா தென்றே - நாதம் அளிக்கின்ற ஆழிவாய் ஆகுலஞ் ... ஒலிக்கின்ற தென்றே உரை".

"மங்கை பொருந்தி மலர் கொய்வாளை வாண்முகத்தைப் பங்கய மென்றெண்ணிப் படிவண்டை - செங்கையால் காத்தாளைக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்ந்ததுவே வேர்த்தாளைக் காணென்றான் வேந்து"

வெண்பா

கடைசி அடி மூன்று பக்கும் மூன்று சீர் அடியாகவும் மற்றைய அடிகள் மூன்றும் நான்கு சீர் அடிகளாகவும் வரும் வெண்பாவில் காய்ச்சீரும் ... இடம் பெறும் இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை ஆகிய தளைகளே இடம்பெறும். காசு பிறப்பு நாள் மலர் என்னும் வாய்பாட்டால் முடிவது வெண்பாவின் போது இலக்கணம். வெண்பாப் பாடத் தொடங்குவோர் நேரசையில் தொடங்குவது நலம்.

தளை

நின்றசீரின் ஈற்றசையோடு வரும் சீரின் முதலசை ஒன்றியேனும் ஒன்றாதேனும் கூடி நிற்பது தளையாகும்.

தளை

1. நேரொன்று ஆசிரியத்தளை
2. நிரையொன்று ஆசிரியத்தளை
3. இயற்சீர் வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை
6. ஒன்றிய வஞ்சித்தளை
7. ஒன்றாத வஞ்சித்தளை

என ஏழாகும். வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையுமே இடம்பெறும்.

மாமுன் நிரையும் விளமுன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை.

பாலும் — தெளிதேனும்
நேர் நேர் நிரை நேர் நேர்
தேமா — புளி மாங்காய்
மாமுன் நிரை வந்தது
விளமுன் நேர் வந்தது.
காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை.

வாரனு மறையும் — தெய்வத் துள்
நேர் நிரை நேர் — நேர் நேர் நேர்
கூட விளங்காய் — தேமாங் காய்
காய்முன் நேர் வந்தது.

சாரி பெரவித்து கம் பீரத்துடன் விளங்குகிறது. இதோ அந்தப்பாடல.

"மும்மதமும் முந்நாடும் மூந்தறியும் மும்பதியும் மும்முரசும் முத்தமிழும் மும்கொடியும் - மும்மாவும் ..."

திருவள்ளுவ மாலையில் ஒரு வெண்பா மோனைச் சிறப்பும் எதுகைச் சிறப்பும் மலிந்த வெண்பாவுக்குரிய நடை தாமுடைய மன்னர் தடமுடி பேர்ந்து சுன்றே பாமுறை தேர் வள்ளுவர் மூப் பால்

**கவிதை இயற்றுங்கள்**

இங்கே வெண்பாவின் ஈற்றடி தரப்பட்டுள்ளது; மிகுதி மூன்று அடிகளையும் நீங்கள் இயற்றி 1-7-80க்கு முன்னர் எமக்கு அனுப்புங்கள் தரமான பாடல்கள் ஈழநாடு வாரமலரில் இடம்பெறும்.

பங்கயத்தில் வண்டுதனைப் பார்

**சுதந்திரம்**

தியாகம் செய்து மக்கள் சுதந்திரம் பெற்றனர். அந்தச் சுதந்திரத்தின் மீது இளைஞர்கள் எப்படிப் பற்று வைப்பார்கள்? சுதந்திரம் மதிப்புடையதாயிருந்தால் நாமே அதை வலுவுள்ளதாயும் நீடித்தும் இருக்கும். மற்றவர்கள் தமை உயர்த்தோ அல்லது தங்களுக்கு அனுகூலம் என்று கருதியோ நமக்குச் சுதந்திரம் அளிப்பார்களானால் அந்தச் சுதந்திரத்திற்கு மதிப்பேது?

— மாஜினி





Agridol E-806

அக்றிடோல் ஈ-806 உடன் கொம்பிளசால் (திரவ உரம்)
சேர்க்கை தெளிப்பு நல்ல பலனைத் தந்துள்ளது

★ புகையிலை குருந்து நோய், வெங்காய எரிவுநோய் நன்கு கட்டுப்படுத்தப்பட்டதுடன், விளைச்சலும் அதிகரித்து காணப்பட்டன.

O குறைந்த செலவில் பூச்சி, புழுக்களை நன்கு கட்டுப்படுத்தக்கூடிய சக்திவாய்ந்த சர்வபூச்சி நாசினி அக்றிடோல் ஈ-806


O துரித செயல்பாடுடைய N.P.K. அதிகசெறிவான சுவட்டு மூலகங்கள் அடங்கியது கொம்பிளசால் திரவ உரம்

அமோக விளைச்சலைத் தரவல்லது. (30% வரை விளைச்சலைக் கூட்டவல்லது.)
நெல், புகையிலை, வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, முந்திரிகை
மற்றும் மரக்கறிப்பயிர்களுக்கும் இச்சேர்க்கைத் தெளிப்பு நல்லபலனைத்தரும்.

அக்றிடோல் ஈ-806 (250 மிலி) (4100 கண்டுக்கு)
அக்றிடோல் ஈ-806 (500 மிலி) (8200 கண்டுக்கு)
அக்றிடோல் ஈ-806 (1000 மிலி) (16400 கண்டுக்கு)
கொம்பிளசால் திரவம் (16 அவு) (3000 கண்டுக்கு)
கொம்பிளசால் திரவம் (5 லீட்டர்) (1.1 கலன்)
(ஒறிஜினல் பிளாஸ்ரிக் அடைப்புக்களில்)

® Complesal fluid

அக்றிகோலாஸ்
173, கேஸ்சர் வீதி,
கொழும்பு-11.
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.
(6004)







Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மேஜர் சுந்தரராஜனின் ஆசை

# வளரும் கலைஞர்களுக்கு உதவவேண்டும்

கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ராஜகோபுர திருப்பணிக்காக நாடக நிகழ்ச்சி நடத்த ஏ. எஸ். என். நாடகக்குழுவினருடன் யாழ்ப்பாணம் வந்திருந்த தென்னிந்திய பிரபல குணசித்திர நடிகர் மேஜர் சுந்தரராஜனை இலங்கையின் திரைப்பட நடிகரும் தயாரிப்பாளருமான டாக்டர் க. இந்திரகுமார் "ஈழநாடு" வாரமலருக்காகப் பேட்டி கண்டார்.

பேட்டி விபரம் இங்கு தரப்படுகின்றது.

திரையுலகில் 1964-ல் நுழைந்த நான் இன்றுவரை கிட்டத்தட்ட முந்நூறு படங்களில் நடித்திருக்கிறேன். இப்போதும் 20 படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறேன். எப்படியோ ரசிகப்பெருமக்களின் ஆதரவோடு தொடர்ந்து நடித்துக்கொண்டிருக்கிறேன். திரை உலகிலும் நாடகத்திலும் நடித்துக்கொண்டு பொதுத்தொண்டு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தென்னிந்திய நடிகர்கள் சங்கத்தில் பாடுபட்டுக்கொண்டிருக்கிறேன். பாடுபடும் நோக்கமே என்னவென்றால் எத்தனையோ அருமையான கலைஞர்கள் என்னிலும் திறமைவாய்ந்த கலைஞர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்தபிறகு அவர்களுக்கு நாங்கள் ஏதும் செய்ய வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்தோடு பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். இதற்கு இருபெரும் திலகங்களின் ஒத்துழைப்பும் இருக்கிறது. ...

உதைக்கக்கூடாது என்பதற்காகவும் வசதியில்லாத போதிலும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளேன்.

டாக்: இனிமேலும் நாடகத்துறைக்கு வருவதற்கு நிச்சயம் நாடகத் துறையிலிருந்துதான் வர வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

மேஜர்: நாடகத்திலே எப்போதும் அவசியமான காட்சிகளையே காட்டுவோம். தேவையற்ற காட்சிகளை அதாவது சண்டைக் காட்சிகள், காதல் காட்சிகள் என்பவற்றை காட்டுவதில்லை. ஏனென்றால் நாடகம் பார்க்கும் ரசிகர்கள் ஓரளவு படித்தவர்கள். அவர்களுக்கு சில விடயங்களை வெகு ...

... லாம். நாடகத்திலே ஒரு தவறு செய்துவிட்டால் உடனே கல்லடியும் கிடைக்கும், முட்டையடியும் கிடைக்கும். அதற்குப் பயத்தோடு நடிக்கவேண்டும். ஆனால் திரையிலே இந்தப் படத்திலே நாங்கள் மிக நன்றாகச் செய்தருக்கிறோம் நல்ல பெயர் வரும் என நினைப்போம். அதற்கு வெற்றியே கிடைக்க ...

> "வளர்ந்துவிட்ட கலைஞர்கள் வளரும் கலைஞர்களுக்கும் வளரமுடியாமல் தத்தளிக்கும் கலைஞர்களுக்கும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும் என்று பிரபல தென்னிந்திய திரைப்பட நடிகர் மேஜர் சுந்தரராஜன் பேட்டி ஒன்றில் கூறினார்."

... என்பதுதான் என்று மேஜர் சுந்தரராஜன் கூறினார்.

டாக்டர்: திரைப்படத் துறையில் கொடிகட்டிப் பறக்கும் நீங்கள் இப்போதும் நாடகத்துறையில் நாட்டம் கொண்டிருப்பதன் காரணம் என்ன?

மேஜர்: நாடகத்துறையின் மூலம்தான் நான் இவ்வளவு முன்னேற்றம் அடைந்தேன். ... நான் வசதியில்லாதபோது என்னுடன் ஒத்துழைத்த நாடகத்தொழில் நுட்பவியலாளர்களுக்கு உதவ வேண்டுமென்பதற்காகவும் எதிர்பார்த்த எண்ணிலை எட்டி ...

மேஜர்: நிச்சயமாக இல்லை. இப்பொழுதெல்லாம் தென்னிந்திய திரைப்படத்துறைக்கு யார் வேண்டுமானாலும் நடிகர்களாகவரலாமென்ற நிலைமை தோன்றிவிட்டது. அவர்களுக்கு ஓரளவுக்குத் திறமையும் இருந்தால், நடிக்கமுடியுமென்ற நம்பிக்கையும் இருந்தால் அந்த இயக்குநருக்கு அவரிடத்தில் எப்படிப் பெயரை வாங்க வேண்டுமென்றும் தெரிந்திருந்தால் யாரையாவது நடிகர்களாகவோ நடிகைகளாகவோ ஆக்கமுடியுமென்று நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள். நாடகத்தில் நடித்துவிட்டுவந்தால் இயக்குநர் சொல்லிக்கொடுப்பதை வெகு விரைவில் தெரிந்துகொண்டு அவர் சொல்லிக்கொடுப்பதை நடிக்கத் திறமையும் தன்னம்பிக்கையும் ஏற்படும்.

டாக்: உங்களுடைய "ஞான ஒளி" நாடகம் திரைப்படமாக ஆக்கப்பட்டது. அது நீங்கள் மேடையேறிய வெற்றிநாடகம். இந்தக் கருவை நாடகமாக ஆக்கும் போதும் ... திரைப்படமாக்கும் போதும் ஏற்பட்ட அனுபவங்களை வைத்து இக்கதையில் நாடகத்திற்கும் சினிமாவிற்கும் இடையேயான வேற்றுமையைச் சுட்டிக் காட்ட முடியுமா?

வேகமாகப் புரிய வைக்க முடியும். ஆனால் திரைப்படங்களைப் பார்க்கும் ரசிகர்களுக்குப் புரிய வைப்பது கடினம். ஆகையினால் அவர்களுக்காக சண்டைக் காட்சிகள் போன்றவை புகுத்தப்படுகின்றன. இதனால் தான் நாடகத்தில் முதிய பருவத்தை மட்டும் காட்டி விட்டு திரைப்படத்தில் இளைஞராகவும் காதல் காட்சிகளையும் புகுத்தியிருக்கிறார்கள்.

... போகும். அதே சமயம் திரையில் ... நடித்திருக்கிறேன் என்று நினைத்தால் அதற்கு நல்ல பெயர் கிடைக்கும். திரைப்படத்தில் நடிப்பதும் நாடகத்தில் நடிப்பதும் கஷ்டமானதுதான். ஆனால் நாடகத்திலே சிறுவயதிலே பழகிவிட்ட நடிகனுக்கு இது ஒரு பெரிய விடயமில்லை என்று நான் கருதுகிறேன்.

டாக்டர்: நாடகத்துறையின் ...

## பேட்டி: டாக்டர் க. இந்திரகுமார்

டாக்டர்: ஒரு நாடகத்திலோ, அல்லது திரைப்படத்திலோ நடிப்பது சிரமமானதா?

மேஜர்: நாடகத்தில் நடிப்பது ஒரு நேரடியாக விளையாட்டைப் பார்க்கலாம். இரண்டு மணி நேரமோ அல்லது மூன்று மணி நேரமோ ... காட்சி ... திரைப்படத்தில் ... ஆனால் நல்ல முறையில் உள்ள ஒரு கலைஞனுக்கு எப்போதும் வேண்டுமானாலும் ...

மிகுந்த ஈடுபாடு கொண்டிருக்கும் நீங்கள் ... மக்களின் பொழுதுபோக்கிற்காக தயாரிக்கப்படுகிறீர்களா ...

மேஜர்: நாடகம் போதும் ... நான் விரும்புகிறேன் ...

... இத்தலைவலகையால் செயலகுறி

டாக்டர்: ஒரு நாடகத்தின் மூலம் சமூகத்தைத் திருத்த முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

மேஜர்: நிச்சயமாக. ஒருவருக்கு ஒரு நாடகத்தைப் பார்க்கும்போது அதிலுள்ள கருத்துக்கள் ஆணித்தரமாக பார்ப்பவர்களின் மனதில் பதியுமாகையால் சீர்திருத்த முடியும். ஆனால் சொல்லுபவர்களையும் பொறுத்தது. நாங்கள் தப்புச் செய்துகொண்டு பிறர்க்கு புத்தி சொல்வது எடுபடாது. நாமும் நல்லவர்களாக இருந்துகொண்டு புத்தி சொல்வதையும் நல்ல மாதிரியாக வாழைப்பழத்தில் மருந்து கொடுப்பதுபோல நாசூக்காகக் கொடுக்கவேண்டும்.

டாக்டர்: மக்களுடைய மனதில் சில வசனங்கள் பதியவேண்டும் என்று நீங்கள் மேடையில் கூறும்போது அவை மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெறவிட்டால் மேடையில் நடிக்கும்போதே உங்களுக்கு மனக்கஷ்டம் ஏற்படுவதுண்டா?

மேஜர்: நாம் எதிர்பார்த்தளவு பிரதிபலிப்பு கிடைக்காவிட்டால் எந்த நடிகனுக்குமே ஏமாற்றம் ஏற்படத்தான் செய்யும். ஆனால் நேரடி பிரதிபலிப்பு இல்லாவிட்டாலும் ...

... (9-ம் பக்கம் பார்க்க)

# நிர்ப்பந்தங்கள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போது... அது யாருவாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற நினைவை சுற்றிவிட முடியவில்லை. அப்படி நடந்து விட முடியுமா என்ற கேள்வியும் கூட வந்து ஒருவித விரக்தியைத் தோற்றுவிக்க அவர் போவதையே வெறித்து நிற்கிறாள் மஞ்சு.

ஒரு மாத விடுமுறை ...

திடீரென்று அவளுக்கு முன் ஆரோக்கியமான சிந்தனை அப்பாவின் தொழிற்சாலைக்கு ஓடி விஜயம் மேற்கொண்டாருமனை? சில நிமிடங்களில் அவள் சிந்தனை செயற்பாடாக மாறுகிறது.

உள்ளே நுழைந்தவள் அப்பாவின் ஆபீஸ் பக்கம் போகாமல் வேலை நடந்து கொண்டிருக்கும் திசையில் திரும்பி ...

...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெஸ்லி** மாவிட்டபுரம்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
**நீர்க்குமிழி**

**ஹூரன்**
தினசரி
எம். ஜி. ஆர்- லதா
**நீதிக்கு தலைவணங்கு**
கலர்-புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர்-ராதிகா
**ரத்தத்தின் ரத்தமே**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
**பணக்காரக்குடும்பம்**

**லிடோ** (யாழ்நகர்) [போன்: 7886
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - லதா **ஞானக்குழந்தை**
நெருக்கடியைத் தவிர்க்க பாடசாலைகள் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளவும்

**100வது நாளை நோக்கி மலர்கிறது**
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தொலைபேசி: 466
தினசரி 10-30, 1-30, 4-30, 7-00
சுதாகர் - ராதிகா விஜயன் - ரதி
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணப்படம்)

7-வது வெற்றி வாரம்
**ராணி** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ கமலஹாசன் (இருவேடங்களில்) ★ ஸ்ரீதேவி
**கல்யாண ராமன்** (கலர்)

Phone : 464
**Manohara** (Jaffna) Daily 5 Shows
OPENING A WHOLE NEW WORLD OF ENTERTAINMENT
Walt Disney's
**"The Living Desert"**
(A True Life Adventure Feature) COLOR
FABULOUSLY BEAUTIFUL !
EXCITINGLY DIFFERENT !
SAVAGELY REAL !
A MUST FOR THE ENTIRE FAMILY
(Schools please contact management for special shows)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயநிர்மலா - ஸ்ரீகாந்த் - சாரதா
நடித்த
**ஞா ன ஒ ளி**

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லக்ஷ்மி - நாகேஷ்
**மா ண வ ன்**

**சாந்தி** யாழ் நகர் தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் ...கே. ஆர் விஜயா
தேவரின் **நல்ல நேரம்**
[ஈஸ்ட்மன் வண்ணச்சித்திரம்]
யாழ் நகரில் வண்ணச்சித்திரமாக இதுவே கடைசித் தடவையாகக் காண்பிக்கப்படுகிறது.
நல்ல வாய்ப்பு!! நல்லநேரம்!!
Await THE THIEF OF BAGHDAD (Color)


## துளி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டைப்பிஞல் இறந்து போஞர். ஒரு கிழமையாக அவருடைய பிரேதத்தை 'எம்பாம்' செய்து வைத்திருந்தும் பிள்ளைகளில் ஒருவர் கூட 'கடமை' செய்ய வரமுடியாமல் போய்விட்டது! ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணம். சௌதி அரேபியாவில் இருந்தவருக்கு தந்திச் செய்தி கிடைத்ததே ஒரு கிழமைக்குப் பிறகுதானும்! எல்லாம் முடிந்த பிறகு மூன்று பேரும் வந்து அம்மாவைப் பார்த்துவிட்டுப் போஞர்கள்.

அந்த அம்மா இப்போது தன்னந்தனியாக அந்தப் பெரிய வீட்டிலிருந்து வருகிருர். ஸாரோ ஒன்றுவிட்ட சகோதரி முறையான ஒரு மனுஷி உதவிக்கு இருக்கிருர். ஒரு வேலைக்காரப் பையனும் இருக்கிருன். அம்மாவுக்கு வாழ்க்கையே சூனியமாக இருக்கிறது. கணவர் போய்விட்டார். ஒன்றல்ல, இரண்டல்ல; மூன்று பிள்ளைகளைப் பெற்று வளர்த்தார். தமது பிற்காலத்தில் தமது பிள்ளைகள் தம்மைப் பார்த்துக் கொள்வார்கள் என்று எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்திருப்பார்கள்.

பிள்ளைகளையும் எப்படிக் குறை சொல்வது? அவர்கள் தங்களுடைய தொழில்களை விட்டு விட்டு இங்கே வந்து அம்மாவுடன் இருக்கமுடியுமா? அல்லது இங்கேயுள்ள வீடு வாசல், சொத்து சுதந்திரம் எல்லாவற்றையும் விட்டு விட்டு அம்மாவைத் தங்களிடம் கொண்டுபோய் வைத்திருக்க முடியுமா? அப்படி கூட்டிக் கொண்டு போனாலும் அந்த அந்நியமான சூழலில் அம்மாவால் நிம்மதியாக வாழ முடியுமா? அப்படியே போனாலும் மூன்று பிள்ளைகளில் யாருடன் போவிருப்பது?

"தலைவிதி" என்று நினைத்துக் கொண்டு அந்தத்தாயார், தன்னுடைய ஆத்துமா நோவுடனும், நெஞ்சு நிறைந்த ஏக்கங்களுடனும் நாட்களைக் கடத்திக் கொண்டு இருக்கிருர். வேண்டியளவு பணம் இருக்கிறது. நல்ல நிலைமையிலிருக்கும் 'நல்ல' பிள்ளைகள் மூன்று பேர் இருக்கிருர்கள். ஆனால் கரட்டு ஒன்றுமில்லை அந்த அம்மாவை சந்தோஷமாக வைத்திருக்க இவையெல்லாம் உதவவில்லையே!

## வளரும்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட எனக்கு இருக்கின்றது. கூட்டுத் தயாரிப்புக்கள் தேவைதான். மலையாள-தமிழ் கூட்டுத் தயாரிப்புக்களில் நடிக்கும் அதிர்ஷ்டத்தைப் பெற்றவன் நான். அந்தத் தயாரிப்புக்களை அதிகம் செலவில்லாமல் செய்தால் வரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அங்கிருந்து வரும் கலைஞர்கள் செலவினங்களைக் குறைத்துக் கொண்டு ஒரு தடவையில் அல்ல இரண்டு தடவையில் முடிக்க வேண்டும். ஆறு ஏழு தடவை இந்தியாவுக்குப் போய்ப் போய் வருவதனால் போக்கு வரத்துச் செலவு அதிகரித்துவிடும். இப்படியான தயாரிப்புக்களில் ஈடுபடும் தயாரிப்பாளர்கள் இரு பது முப்பது நாட்களில் கால்ஷீட்டுகளை வைத்து செயல்பட்டால் நல்ல வெற்றியளிக்கும். இரு நாடுகளின் கலாச்சாரங்களையும் வளர்க்கும் இங்கு வெளியாகும் படங்கள் அங்கும் அங்கு வெளியாகும் படங்கள் இங்கும் வெளியாக வேண்டும்.

நல்ல நீதியான, நேர்மையான அரசு உள்ள நாட்டில் குற்றம் செய்தவனும், செய்ய நினைக்கிறவனும் அந்த அரசுக்குப் பயப்பட வேண்டும், பாவம் செய்தவனும் பாவம் செய்ய நினைக்கிறவனும் கடவுளுக்குப் பயப்பட வேண்டும்.

நாட்டின் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்பட்டு நேர்மையாக நடக்கிறவன் அரசுக்கு முன் தலை நிமிர்ந்து நடக்க முடியும். அவன் அரசைத் தொழுது 'பந்தம்' பிடிக்க வேண்டியதில்லை:

மனத்துக்கள் மாசிலனாக வாழ்கிறவன் கடவுளைத் தொழுது, 'லஞ்சம்' செலுத்தத்தேவையில்லை!

## முக அழகும்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தைக் குழந்தை கைவிட்டு விடும்.

**முதல் வெட்டும் பற்களுக்கிடையில் இடைவெளி தோன்றுதல்**


பொதுவாக முதல்வெட்டும் பற்களுக்கிடையில் பெரிய இடைவெளி ஏற்பட்டிருப்பதை ஒருவரும் விரும்பமாட்டார்கள்.

1. இயற்கையாகத் தோன்றும் இடைவெளி - பற்களின் பருமனுக்கும் அலகின் வளர்ச்சிக்கும் மாறுபட்டிருப்பதால் அல்லது பரம்பரையாக பற்கள் சிறிதாக இருப்பதால் இப்படியான இடைவெளி ஏற்படும். இதனை அழகு செய் கருவியால் மாற்றியமைக்கலாம்.

2. மேலதிகப் பற்கள் முன்வாயப் பற்களுக்கிடையில் தோன்றுவதால் இப்படியான இடைவெளி தோன்றும். இதற்கு மேலதிகப்பல்லைப் பிடுங்கிவிட்ட பின்பு அழகு செய் கருவியினுல் இடைவெளியை அகற்றலாம்.

3. 'பிறினம்' (Fraenum) சாதாரணமாக மேலுதட்டின் மூரசும் முதல் வெட்டும் பற்களுக்கிடையிலுள்ள மூரசும் பகுதியும் இப்'பிறினத்'தாலே தொடுக்கப்பட்டிருக்கும். சிலருக்கு இளமையில் இப்பிறினம் தடிப்பாகவும் நடுப்பற்களுக்கிடையே இடைவெளி உண்டுபண்ணக்கூடியதுமாக இருந்து நாளடைவிலே படிப்படியாகக் கரைந்து குறைந்து விடும். ஆனல் சிலருக்கு இது இறுக்கமுடைய நார்மிகுந்த இழையத்தால் ஆக்கப்பட்டு முன்நடுப் பற்களுக்கிடையில் பெரிய வெளியை நிலையாக உண்டாக்கிவிடும். இவர்களுக்குச் சத்திர சிகிச்சை செய்து 'பிறினத்தை' அகற்றி 'அழகுசெய்' கருவிகளினுல் இடைவெளியையும் இல்லாமற் செய்யலாம்.

(தொடரும்)


EDNA எட்ரு
**சொக்லெட்**
சுவைப் பிரியர்களுக்கு மகிழ்வூட்டும் செய்தி!
சகல உள்ளூர் வியாபாரிகளிடமும் தாராளமாகக் கிடைக்கிறது!
ஆஹா என்ன சுவை!
அரிய பல சுவைகளில்
★ எட்ரு கிறீம் போல் சொக்லட்
★ சொக்லட் ஸ்லப்ஸ்
★ எட்ரு ரொபி அத்தனையும் இனிமை. சுவைத்து இன்புறுங்கள்!!
கேட்டு வாங்குங்கள்!
MANUFACTURERS:
எட்ரு சொக்லட்ஸ் (சிலோன்) லிமிட்.
EDNA CHOCOLATES (CEYLON) LTD
(8024)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

